
# நினைத்துப் பார்

# புரிந்து கொள்

# இன்வெஸ்ட் செய்



பங்கு சந்தைகளில் கடந்த சில வருடங்களாக ஏற்பட்டுவரும் பரபரப்பான செயல்கள், முதலீடு செய்வதில் ஆர்வம் உள்ளவர்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு வழிவகுத்திருக்கிறது. சந்தைகளில் வர்த்தகம் செய்யும்போது பல முதலீட்டாளர்கள் பிரச்னைகளை எதிர் கொள்ள வேண்டியிருக்கிறது. அம்மாதிரியான முக்கியப் பிரச்னைகளின் ஒன்றுதான் முதலீட்டாளர்கள் கணக்கிலிருந்து அங்கீகாரமில்லாத வர்த்தங்கள் செய்யப்பட முடிவது,

தங்களுடைய கணக்குகளிலிருந்து அங்கீகரிக்கப்படாத வர்த்தங்கள் நடைபெறுவதை தடுக்கும் விதத்தில் முதலீட்டாளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த மீகுஉ எடுத்திருக்கும் தொடக்க முயற்சி இது.

## உங்கள் கணக்குகளில் நீங்கள் அங்கீகரிக்காத வர்த்தகங்கள் நிகழாமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள்

### வர்த்தகத்திற்கு முன்

**கணக்கு தொடங்குதல்**

- உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள் (KYC) படிவம் பூர்த்தி செய்ய வேண்டும், உறுப்பினர் வாடிக்கையாளர் ஒப்பந்தம் (MCA) படிக்க மறக்காதீர்கள், அபாயங்கள் அறிவிப்பு ஆவணம் (RDD) படித்துப் பார்த்து கையெழுத்து போடுங்கள்.
- நீங்கள் ஒருவேளை துணை-தரகருடன் வரவுசெலவு வைத்திருப்பவர் என்றால், முதலீடு செய்பவர்,-- துணை-தரகர்,--வர்த்தகம் செய்யும் உறுப்பினர் இடையிலான முப்பகுதிகளுள்ள (டிரைபார்ட்டைட்) ஒப்பந்தத்தை அவசியம் கையெழுத்திட்டு செயல்படுத்த வேண்டும்.
- உங்கள் அடையாளக் குறிப்பு சான்றிதழ், முகவரிக்கான சான்றிதழ் மற்றும் உங்கள் நிரந்தர கணக்கு எண் (PAN) நகல், இம்மூன்றையும் மறவாமல் கொடுக்க வேண்டும்.
- வர்த்தகம் செய்யும் உறுப்பினர் உங்களுக்குக் கொடுக்கும் யூனீக் கிளையண்ட் கோட் என்ற ஒரு சிறப்பு வாடிக்கையாளர் அடையாளம் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- வர்த்தகம் செய்யும் உறுப்பினரிடம் எல்லா ஆவணங்களையும் கொடுப்பதற்கு முன்னர், அவற்றின் ஒரு நகல் எடுத்து உங்களிடம் வைத்திருங்கள். எதிர்காலத்தில் இது உங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

**நீங்கள் கவனம் செலுத்த வேண்டிய பகுதிகள் .. .. ..**

1. உங்கள் விருப்பத் தேர்வாக மீகுஉ எக்ஸ்சேஞ்சைச்சுட்டிக் காட்டுங்கள். நீங்கள் வர்த்தகம் செய்ய விரும்பாத மற்ற எக்ஸ்சேஞ்சின் பெயரை அடித்து விடுங்கள்.
2. உங்களுக்குப் பொருந்தும் வர்த்தகப் பிரிவைச் சுட்டிக் காட்டுங்கள். அதாவது, எக்ஸ்சேஞ்ஜின் காப்பிடல் மார்கெட் (CM) பிரிவு மற்றும்/அல்லது ஃப்யூச்சர்ஸ் - ஆப்ஷன்ஸ் (F&O) பிரிவு. இதைச் செய்யும்போது எந்த நிர்பந்தத்திற்கும் நீங்கள் ஆளாகக் கூடாது. நீங்கள் வர்த்தகம் செய்ய விரும்பாத பிரிவை அடித்து விடுங்கள்.
3. ஆர்டர் அமோதிப்புகளைப் பெறுவதற்கு, காண்ட்ராக்ட் நோட்டுகள் மற்றும் பணம் மற்றும் செக்யூரிடீஸ் ஸ்டேட்மெண்ட்கள் பெறுவதற்கான உங்கள் விருப்பம் டிஜிடல் ரூபத்திலா அல்லது பேப்பர் ரூபத்திலா என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டு அதற்கான செக் மார்க் செய்ய வேண்டும்.
   **நீங்கள் டிஜிடல் ரூபம் என்று தேர்வு செய்திருந்தால், முக்கியமாகக் கவனிக்க வேண்டியவை:**
   i. டிஜிட்டல் கையெழுத்து போட்ட ஆவணங்கள் பெறுவதற்கான நிபந்தனைகள் தெளிவாகப் புரிந்திருக்க வேண்டும்.
   ii. நீங்கள் வழக்கமாக உபயோகிக்கும் ஈ-மெயில் ஐடி கொடுக்க வேண்டும்.
   iii. ஈ-மெயில் ஐடி உருவாக்குவதை நீங்கள் யாருக்கும் விட்டுக் கொடுக்கக் கூடாது, அதாவது ரிலேஷன்ஷிப் மேனேஜர், டீலர் போன்றவர்கள் உங்கள் ஈ-மெயில் ஐடி யை உருவாக்கக் கூடாது.
   iv. வர்த்தகம் செய்யும் உறுப்பினரிடமிருந்து உங்கள் ஈ-மெயில் ஐடி பெற்றுக் கொண்டதற்கான ஆமோதிப்பு உங்களுக்குக் கிடைக்க வேண்டும்.

   நீங்கள் பேப்பர் ரூபம் என்று தேர்வு செய்திருந்தால், முக்கியமாகக் கவனிக்க வேண்டியவை:
   i. காண்ட்ராக்ட் நோட்டுகள் மற்றும் பிற ஆவணங்கள் உங்களுக்கு வந்து சேருவதற்கான சரியான முகவரியைக் கொடுக்க மறக்காதீர்கள்.
   ii. ஈ-மெயில் ஐடி காலத்தை அடித்துவிட்டு, "டிஜிடல் ரூபத்தில் ஆவணங்களைப் பெற சம்மதமில்லை" என்று தெளிவாக எழுதுங்கள்.
4. நீங்கள் ஆன் - லைன் /இன்டர்நெட் டிரேடிங் செய்வதற்காக பதிவு செய்து கொள்கிறீர்கள் என்றால், நீங்கள் இதற்காக ஆயத்தமாக இருப்பதை உறுதி படுத்திக் கொள்ளுங்கள்:
   i. உங்களுக்கு கம்ப்யூட்டர் உபயோகித்து இயக்கத் தெரியும்.
   ii. வர்த்தகம் செய்யும் உறுப்பினர் கொடுத்திருக்கும் பழகிக்கொள்ளும் அறிமுக பாடங்கள் (familiarization kit) கிடைத்திருக்கின்றன.
   iii. நீங்கள் டிரேடிங் செய்வதற்கு முன், கொடுக்கப்பட்டிருக்கும் மென்பொருள் சரிபார்க்கப்பட்டிருக்கிறது, உங்கள் கம்ப்யூட்டரில் சரியாக நிருவப் பட்டிருக்கிறது, வர்த்தகம் செய்யும் உறுப்பினர் உங்களுக்குத் தேவையான பயிற்சி அளித்திருக்கிறார் என்பனவற்றை உறுதி செய்து கொள்ளுங்கள்.
   iv. உங்கள் கணக்கில் முதன்முறையாக நுழைந்தவுடன், உங்கள் பாஸ்வார்டை (கடவுச்சொல்) உடனடியாக மாற்றுங்கள். புதிய கடவுச்சொல்லை அதற்கான நெறிமுறைகளை அனுசரித்து மட்டுமே உருவாக்குங்கள்.
   v. உங்கள் யூசர் ஐடி மற்றும் பாஸ்வர்ட்டை யாருடனும் பகிர்ந்து கொள்ளாதீர்கள்.
   vi. நெட்வொர்க் அல்லது அதைச் சார்ந்த மற்ற பிரச்னைகள் ஏற்படும்போது, ஆர்டர்களை கொடுப்பதற்கான மாற்று வழிகள் என்னவென்று சரிவரப் புரிந்து கொள்ளுங்கள்.
   vii. நீங்கள் ஆர்டரைக் கொடுத்தவுடன் மற்றும் உங்கள் வர்த்தகங்கள் நிறைவேற்றப்பட்ட பிறகு, சிஸ்டம் கன்ஃபர்மேஷன் கிடைக்கிறதா என்று உறுதிபடுத்திக் கொள்ளுங்கள்.

5. ஒப்பந்தப் படிவத்தில் NSE விதித்துள்ள சட்டப்படியான ஷரத்துக்களுக்கு மேற்பட்டு நீங்களும் வர்த்தகம் செய்யும் உறுப்பினரும் ஒப்புக்கொண்டுள்ள தனிப்பட்ட விருப்ப நிபந்தனைகளும் இடம் பெறலாம். இந்த விருப்ப நிபந்தனைகளின் உள்ளார்ந்த அர்த்தங்களைச் சரிவர புரிந்து கொண்ட பிறகே நீங்கள் கையெழுத்திட வேண்டும். வர்த்தகம் செய்யும் உறுப்பினர் மற்றும் முதலீட்டாளர் இடையிலான இம்மாதிரியான விருப்ப நிபந்தனைகளின் (ஷரத்துக்கள்) / செயலாக்கப்பட்ட ஆவணங்கள் / ஒப்புக் கொள்ளப் பட்டவைகளின் எடுத்துக் காட்டு உதாரணங்கள் கீழே கொடுக்கப்பட்டவை போலிருக்கலாம்:

**நடைமுறையில் இருக்கும் கணக்கு :** முதலீட்டாளர் விரும்பும் சமயங்களில், எக்ஸ்சேஞ்ச் பே-அவுட் செய்த 24 மணி நேரத்திற்குள், தன் கணக்கில் பணம் மற்றும் செக்யூரிடீஸ் பெறுவதற்கு முதலீட்டாளர் சம்மதிக்கிறார்..

**குரூப் கணக்கு :** முதலீட்டாரின் குடும்ப உறுப்பினர்களின் கிரிடிட் / டெபிட் இருப்புகளை வர்த்தகம் செய்யும் உறுப்பினர் அட்ஜஸ்ட் செய்வதற்கு முதலீட்டாளர் சம்மதம்
தெரிவிக்கிறார்..

**பவர் ஆஃப் அட்டார்னி:** எக்ஸ்சேஞ்ச் சம்பந்தப்பட்ட கொடுத்தல் / பெறுதல் கடமைகளுக்கு வர்த்தகம் செய்யும் உறுப்பினர் முதலீட்டாரின் டெபாசிட்டரி கணக்கை இயக்குவதற்கு உரிமம்
வழங்குகிறார்.

**தரகுப் பணம் மட்டும் கட்டணங்கள் :** வர்த்தகம் செய்யும் உறுப்பினர் தன் சேவைகளுக்கான கட்டணங்கள் வசூலிப்பதற்கு முதலீட்டார் சம்மதம் வழங்கும் ஷரத்துக்கள்.

## டிரேடிங்

1. ஆர்டர் செய்வதற்கு முன், உங்கள் பெயரையும், கிளையண்ட் (வாடிக்கையாளர்) கோட் எண்ணையும் தவறாமல் குறிப்பிடுங்கள். 2. செக்யூரிடி விவரங்கள், அதன் எண்ணிக்கை மற்றும் விலை குறிப்புகளை தெளிவாகக் குறிப்பிடுவதில் கவனமாக இருங்கள். 3. பூசி மெழுகுவது போன்ற ஒட்டுமொத்தமான கட்டளைகள் உங்கள் சார்பாகச் செய்வதற்கு ஒருபோதும் சம்மதிக்காதீர்கள். 4. நீங்கள் கொடுத்திருக்கும் எல்லா ஆர்டர்களும் உங்களுக்கு அளிக்கப்பட்ட யூனீக் கிளையண்ட் கோட் (UCC) எண்ணில் பதிவு செய்யப்படுகின்றனவா என்பதை உறுதிபடுத்திக் கொள்வதில் கவனமாக இருங்கள். 5. நீங்கள் ஆன் - லைனில் முதலீடு செய்பவர் என்றால், உங்கள் பாஸ்வார்டை (கடவுச்சொல்) வழக்கமான கால இடைவெளிகளில் மாற்றுவதற்கு மறக்க வேண்டாம்.

## டிரேடிங் செய்த பிறகு

1. டிரேடிங் செய்த 24 மணி நேரத்திற்குள் செய்யப்பட்ட எல்லா வர்த்தகங்களுக்கான காண்ட்ராக்ட் நோட்டுகள் வர்த்தகம் செய்யும் உறுப்பினரிடமிருந்து உங்களுக்குக் கிடைக்கின்றனவா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். 2. டிஜிட்டல் ரூபத்தில் உங்களுக்கு காண்ட்ராக்ட் நோட்டுகள் கிடைப்பதற்கு நீங்கள் விருப்பத் தேர்வு செய்திருந்தால், உங்கள் ஈ-மெயிலை தினசரி பார்த்து நீங்கள் செய்திருக்கும் எல்லா டிரான்ஸாக்ஷன்களும் பதிவாகியிருக்கின்றனவா என்று உறுதிபடுத்திக் கொள்ளுங்கள். 3. உங்கள் பயனாளி கணக்கில் (டீமாட்) காட்டப்படும் பதிவுகளை வழக்கமாகச் சரிபார்த்துக் கொள்வதில் சுணக்கம் காட்டாதீர்கள். 4. உங்கள் டீமாட் கணக்கில் பதிவு பெறும் செக்யூரிடீஸ் வரவு செலவுகள் உங்கள் சார்பில் நீங்கள் அங்கீகரித்துச் செய்யப்பட்டவைதான் என்பதில் உறுதியாக இருங்கள். 5. நீங்கள் செலுத்தும் மற்றும் பெறும் பணம்/ செக்யூரிடீஸ் உங்கள் வர்த்தகம் செய்யும் உறுப்பினரின் கணக்கிலிருந்து மட்டுமே நிகழ்கிறது என்பதில் கவனமாக இருங்கள். 6. நீங்கள் செலுத்தும் தொகைகள் அக்கவுண்ட் பேயீ செக் / டிமாண்ட் டிராஃப்ட் / பே ஆர்டர் வழியாக, வர்த்தகம் செய்யும் உறுப்பினரின் பெயரில் செய்ய வேண்டும். 7. ஒவ்வொரு காலாண்டுக்கான பணம் மற்றும் செக்யூரிடீஸ் வரவு செலவு ஸ்டேட்மெண்ட் உங்கள் வர்த்தகம் செய்யும் உறுப்பினரிடமிருந்து உங்களுக்குக் கிடைக்க வேண்டும்; அதில் காட்டப்பட்டிருக்கும் பதிவுகளைச் சரிபாக்க ஒருபோதும் மறக்காதீர்கள்.

**வர்த்தகச் செயல்பாடுகளை தற்காலிகமாக நிறுத்தி வைப்பது அல்லது கணக்கை மூடிவிடுவது**

1. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வர்த்தக செயல்பாடுகளை நீங்கள் நிறுத்தி வைக்க வேண்டி இருந்தால் (நீங்கள் பயணம் செய்ய வேண்டி இருப்பது / மருத்துவ சிகிச்சைபெற்றுக் கொள்ள நேர்வது போன்றவை), உங்கள் வர்த்தகம் செய்யும் உறுப்பினருக்கு எழுத்துமூலம் தெரிவித்து அதற்கான சம்மதத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும். 2. நீங்கள் உங்கள் டிரேடிங் கணக்கை மூடிவிட முடிவு செய்யும் பட்சத்தில், அதற்கான எல்லா சடங்குமுறைகளையும் பூர்த்தி செய்து உங்கள் வர்த்தகம் செய்யும் உறுப்பினரிடமிருந்து கணக்கை மூடியதற்கான தகவல் எழுத்துமூலம் பெறுவதில் உறுதியாக இருங்கள்.

**ஞாபகத்தில் வைத்திருங்கள் .. .. .. ..**

1. நீங்கள் செய்திருக்கும் டிரேடுகளை (வர்த்தகங்களை) www.nseindia.com இணையதளத்தில் தவறாமல் சரிபார்த்துக் கொள்ளுங்கள். 5 நாட்களுக்கான வர்த்தக தகவல்கள் NSE இணையதளத்தில் பார்க்க முடியும். 2. காண்ட்ராக்ட் நோட்டுகளில் காணப்படும் அல்லது காலாண்டு அறிக்கைகளில் (ஸ்டேட்மெண்ட்) காட்டப்பட்டிருக்கும் பதிவுகளை சரிபார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் அங்கீகரித்திருக்காத வரவு செலவு ஏதேனும் ஒருவேளை அதில் இடம் பெற்றிருந்தால், உங்கள் வர்த்தகம் செய்யும் உறுப்பினரின் கம்ப்ளையன்ஸ் அதிகாரிக்கு எழுத்துமூலம், டிரான்ஸாக்ஷன் நடந்த 10 தினங்களுக்குள் உங்கள் முறையீட்டைத் தெரியப் படுத்துங்கள். 3. உங்கள் முறையீட்டிற்கான பதில் / சரிசெய்யப்பட்ட காரியம் 15 நாட்களுக்குள் உங்களுக்குத் தெரிய வரவேண்டும்; இல்லாவிட்டால், எக்ஸ்சேஞ்ஜின் முதலீட்டார் சேவை மையத்தில் (ISC) உங்கள் முறையீட்டைத் தாக்கல் செய்யுங்கள். 4. ஏற்பட்ட நட்டத்தை சரிசெய்வதற்கு உங்கள் கணக்கில் கூடுதல் வர்த்தகம் (டிரேட்கள்) செய்வதாக சொல்லப்பட்டால் அதை ஏற்றுக் கொள்வதில் கவனமாக இருங்கள்; இதனால், கடந்த காலத்தில் செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத வர்த்தகங்களுக்கு நீங்கள் ஒப்புதல் அளித்ததுபோல் ஆகிவிடும்.

**பொறுப்பு மறுப்பு**

இந்தப் பக்கங்களில் காணப்படும் விபரங்கள், தகவல்கள் மற்றும் நிபந்தனைகளும் கட்டுப்பாடுகளும் மற்றும் விளக்கங்களும் முன்னறிவிப்பு இல்லாமல் மாற்றத்திற்கு உள்ளாகக் கூடியவை. இக்கையேட்டில் பதிவாகியிருக்கும் செய்திகள் ''அது அது உள்ளபடி', 'கிடைத்த தகவல்படி' என்ற அடிப்படையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன, அதனால் விபரங்களின் துல்லியம், அதன் தேவையளவு அல்லது முழுமை குறித்த எந்த உறுதிமொழியும் NSE அளிக்கவில்லை; மேலும் செய்திகள் மற்றும் தகவல்களில் ஏற்பட்டுள்ள தவறுகள் அல்லது விடுபட்டவைகள் குறித்த எந்த பொறுப்பையும் வெளிப்படையாக மறுக்கிறது.

## முதலீட்டார்கள் சேவை மையங்கள்:

**முதலீட்டார்கள் சேவை மையங்கள்:**
**மும்பை:** நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட்
எக்ஸ்சேஞ்ச் பிளாசா, இ-1, பிளாக் எ, பாந்த்ரா-குர்லா காம்ப்ளெக்ஸ்,
பாந்த்ரா கிழக்கு, மும்பை - 400 051
தொலைபேசி எண்: 26598190. ஃபேக்ஸ் எண்: 26598191
ஈ-மெயில்: ignse@nse.co.in

**கொல்கத்தா:** நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட்
முதல் மாடி, பார்க் அவென்யூ அபார்ட்மெண்ட்ஸ், 99, ராஷ் பிஹாரி அவென்யூ,
கொல்கத்தா - 700 029
தொலைபேசி: (033) 24631802-1805, 24631809-1812
ஃபேக்ஸ் எண்: (033) 24631791, 24631806
ஈ-மெயில்: nseisckol@nse.co.in

**ஹைதிராபாத் :** நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ் ஆஃப் இந்தியா லிமிடெட்
எச் எண்.3-6-322, மஹாவீர் ஹவுஸ், 2-ம் மாடி, சேம்பர் எண்.203 - 204,
பஷீர்பாக், ஹைதிராபாத் - 500029
தொலைபேசி: (040) 23227084, (040) 23227085 ஃபேக்ஸ் எண்: (040) 23227086
ஈ-மெயில்: nseischyd@nse.co.in

தில்லி : நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட்
4-ம் மாடி, ஜீவன் விகார் பில்டிங், பார்லிமெண்ட் தெரு, புது தில்லி - 110 001
தொலைபேசி: (011) 23344313 - 23344327 ஃபேக்ஸ் எண்: (011) 2336 6658
ஈ-மெயில்: nseiscdel@nse.co.in

சென்னை : நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட்
7-ம் மாடி, அரிஹந்த் நிட்கோ பார்க், 90, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, மைலாபூர்,
சென்னை - 600 004
தொலைபேசி: (044) 2847 5100 / 2847 3670 ஃபேக்ஸ் எண்: (044) 2847 3633
ஈ-மெயில்: nseiscchen@nse.co.in

அஹமதாபாத் : நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ் ஆஃப் இந்தியா லிமிடெட்
406 சாகர் ஐஜ-, எல்லீஸ் பாலம் எதிரில், அஹமதாபாத் - 380 006
தொலைபேசி: (079) 2658 0212 / 2658 0213 ஃபேக்ஸ் எண்: (079) 2657 6123
ஈ-மெயில்: nseiscahm@nse.co.in

வருகை புரியுங்கள் : www.nseindia.com

முதலீட்டார்கள் ந'ன் கருதி வெளியிட்டவர்கள்
NATIONAL STOCK EXCHANGE OF INDIA LIMITED